# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE VANDAVASI.

Calender :
Miscellaneous :
Preliminary Register : Case No.**CC.No. 23/2016**
Sessions :
Deposition of Witness for :
Prosecution/Defence/Court: PW8

Name : Tr. Ravichandren S.I. of Police
Father's/Husband's Name : Tr. P.vishvanathan
Village :
Taluk :
Caste : --
Nationality : Indian
Religion :
Age : 56
Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 04.02.2019.

<u>முதல் விசாரணை</u> <u>அ.சா.8</u>

நான் தற்போது வந்தவாசி வடக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது வடவணக்கப்பாடியில் சிறப்பு உதவி ஆய்வாரளாக பணி புரிந்து வந்தேன். கடந்த 30.03.2015ம் தேதி காலை 11.30 மணிக்கு நடந்த சம்பவத்தின் பேரில் வந்தவாசி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த திரு. முருகன் த/பெ. மணியழகன் ரோட்டு தெரு, சின்ன இளவந்தாங்கள். வந்தவாசி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தவரிடம் வடவணக்கம்பாடி காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சேகர் என்பவர் வாக்குமூலம் பெற்று சி.எஸ்.ஆர். 31/15 என்ற எண்ணை கொடுத்து அதை நான் 06.04.2015 தேதி பரிசீலிணை செய்து, நிலைய கு.எண். 48/15 பிரிவு 341, 323 இதச வின் படி 10.30 மணிக்கு 06.04.2015 வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆகும்.** அன்றைய தினம் 11.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தினை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆகும். பார்வை மசர் அ.த.சா.ஆ.7 ஆகும்.** சாட்சிகள் அ.சா.1 முருகன், அ.சா.2 பார்வதி, அ.சா.3 மோகன், அ.சா.4 சம்பத், அ.சா.5 பத்மாநாபன், அ.சா.7 குமரன், ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகளை 12.04.2015 அன்றைய மதியம் 12.30 மணிக்கு வடவணக்கம்பாடி பேருந்து நிறுத்ததில் வைத்து கைது செய்து நிலைய ஜாமீனில்

விடுவித்தேன். பின்பு வழக்கு கோப்புகளை மேல் நடவடிக்கைகாக உதவி ஆய்வாளர் முன்பு வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரிக்க விவரம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்க விசாரணை**

எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.